<u>IN THE COURT OF THE DISTRICT MUNSIF OF ARAKKONAM</u>

OS.NO.129/2012

Deposition of Witness : DW- 2

Name : ஆதிநாராயணரெட்டி

Father Name /W/o : ஜெயராம சந்திரா ரெட்டி

Religion : இந்து

Caste : -

Calling : -

Address : கங்காதர நல்லூர் கிராமம், சித்தூர் மாவட்டம்.

Solemnly affirmation accordance with the provision of Act X 1873 on the day of 09.10.2023.

குறுக்கு விசாரணை :-

1. வாதி கார்த்திகேயன் என் தகப்பனார் மீது வழக்கு தாக்கல் செய்து என் தந்தை இறந்த பிறகு பிரதிவாதிகள் 2 முதல் 5 அதில் சேர்க்கப்பட்டுள்ளோம் என்றால் ஆம். கார்த்திகேயன் தாக்கல் செய்துள்ள வழக்கு விவரங்கள் தெரியுமா என்றால் தெரியும். தாவா சர்வே எண் தெரியுமா என்றால் தெரியும். சர்வே எண்.56/3எ, சர்வே எண்.56/3பி, சர்வே எண்.56/3சி. சர்வே எண்.56/3எ எவ்வளவு விஸ்தீரணத்திற்கு போட்டுள்ளார் என்றால் சரியாக ஞாபகம் இல்லை ஆவணத்தை பார்த்தால் தெரியும். சர்வே எண்.56/3பி, சர்வே எண்.56/3சி, எவ்வளவு விஸ்தீரணத்திற்கு போட்டுள்ளார் என்றால் சரியாக ஞாபகம் இல்லை ஆவணத்தை பார்த்தால் தெரியும்.

2. நான் தவறாக சொல்கிறேன் என்றாலும் கார்த்திகேயன் சர்வே எண்.56/3பிக்கு மட்டும் தான் 1800 சதுரடிக்கு வழக்கு போட்டுள்ளார் என்றால் சரிதான். சர்வே

எண்.56/3பி என்பது அரசுக்கு சொந்தமான புறம்போக்கு இடம் என்றால் ஆம். 2008 முதல் குடிசை வீடு கட்டி அங்கு வாழ்ந்து வருகிறார் என்று எனக்கு தெரியுமா என்றால் குடிசை கட்டியது தெரியும் வாழந்து வருவது பற்றி தெரியாது. சர்வே எண்.56/3பி, 1800 சதுர அடி அரசுக்கு பாத்தியப்பட்டது என்பதால் நான் உரிமை கோர முடியாது என்றால் சரிதான். தாவா சொத்து குறித்து அரசாங்கம் தான் உரிமை கோர முடியும் என்றால் சரிதான். தாவா சொத்து வாதியின் குடும்பம் தொடர்ந்து அனுபவித்து வருவதால் அனுபவ பாத்தியதை மூலம் அவருக்கு தான் உரிமை என்றால் அவர் தான் வழக்கை தாக்கல் செய்தார்.

3. 1ம் பிரதிவாதி என் தந்தை 14.09.2012 அன்று வாதியின் அனுபவத்தை தடை செய்ததால் என் தகப்பனார் மீது வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் ஆம். வழக்கு சொத்து குறித்து என் தகப்பனார் பெயரில் தாக்கல் செய்யப்பட்டு அவரின் மறைவிற்கு பிறகு நாங்கள் சேர்க்கப்பட்டதால் இந்த வழக்கு எங்களை கட்டுப்படுத்தும் என்பதால் ஆம். இந்த வழக்கு சொத்து குறித்து எங்களுக்கு எதிராக தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை செலவு தொகையுடன் வழங்கப்பட வேண்டும் என்று வாதி கேட்கிறார் என்றால் சரியல்ல. எங்கள் தரப்பில் தாக்கல் செய்துள்ள பி.சா.ஆ.1 முதல் பி.சா.ஆ.4 வரையான ஆவணங்கள் இவ்வழக்கிற்க சம்மந்தம் இல்லாதது என்றால் சரியல்ல. தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.